★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5[illegible]

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 4உ வியாழன் (16 2 56) ★ ★ வெளியூர்: மாசி 5உ வெள்ளி (17—2—56) [இதழ் 210

## மாநில புது அமைப்பு மசோதா: டில்லியின் தாக்கீது

மாநிலப் புது அமைப்பு மசோதா குறித்த கருத்துக்களை டில்லி மார்ச் 15-ந் தேதிக்குள் பெறுவதற்கு வசதியாயிருக்கும் வகையில் மாநில சட்டசபைகளின் கூட்டத்தொடர் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துக் கொள்ளுமாறு டில்லி சர்க்கார் எல்லா மாநில சர்க்கார்களையும் தந்தி மூலம் கேட்டுக்கொண்டிருக்கின்றனராம்.

மசோதா இந்த மாத இறுதிக்குள் மாநிலங்களுக்கு அனுப்பப்படுமாம்.

# பொதுச்செயலாளர் சுற்றுப்பயணம்

## பிப். 20-ந் தேதி ஹர்த்தாலுக்குத் தமிழகமெங்கும் பெருத்த ஆதரவு

## சர்வகட்சித் தோழர்களிடையே காணப்படும் ஆர்வமிக்க எழுச்சி

### வணிகப் பெருமக்களும் முன் நிற்கின்றனர்

சர்வ கட்சி கூட்டணியின் முடிவுக்கேற்ப, 20—2—56 அன்று பொதுவேலை நிறுத்தத்தை வெற்றிகரமாகவும், அமைதியாகவும் நடைபெறச் செய்யவும் கழகத் தோழர்களையும், கூடுமான அளவு சர்வ கட்சிக் கூட்டணியில் சேர்ந்துள்ள பிற கட்சித் தோழர்களையும் சந்தித்து விவரம் அறிந்து விளக்கம் கூறவும், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என் வி. நடராசன் ஆகியோர் 12—2 56 அன்று சுற்றுப்பயணம் துவங்கி, கீழ்க்கண்டவாறு ஆங்காங்கு தோழர்களைச் சந்தித்து விளக்கம் கூறி வருகின்றனர்.

இச்சுற்றுப் பயணத்தால், பொதுவாக மக்களிடையே புதிய ஒளி உணர்ச்சியும், குறிப்பாக சர்வ கட்சிக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளைச் சார்ந்தவர்களிடையே தோழமையும் பெருகி நிற்கிறது சுற்றுப் பயணத்தில் குறிப்பிட்டுள்ள பேரூர்களில் மட்டுமல்லாமல் வழி நெடுக ஆங்காங்குள்ள கிளைக் கழக நிர்வாகிகள் பொதுச்செயலாளரைச் சந்தித்து விவரம் கூறி விளக்கம் பெற்றதோடு, அந்தந்த ஊர்களில் உள்ள நிலைமையை விளக்கினர். ஒவ்வொரு ஊரிலும் சர்வகட்சி கூட்டணியின் சார்பிலும் கழகச் சார்பிலும் பொதுச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர் ஆகியோருக்கு மலர்மாலைகள் சூட்டி வரவேற்கப்பட்டது.

தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் இவ்விதச் சுற்றுப் பயணம் இதுவரை நடைபெற்றதில்லையென்றும், இந்தச் சுற்றுப்பயணத்தினால் ஏற்படும் சக்தியானது தமிழகத்தின் எதிர்கால ஆக்கப் பணிக்குப் பெரிதும் பயன்பட வேண்டுமென்று சர்வ கட்சித் தோழர்கள் மனமார விரும்பி அதனை வெளிப்படையாக எடுத்தும் கூறினர்

12—2—56 இரவு 11 மணிக்கு காஞ்சியிலிருந்து பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள், துணைப் பொதுச் செயலாளர் என் வி. நடராசன் அவர்களுடன் புறப்பட்டார். செங்கற்பட்டு மாவட்ட தி மு கழகச் செயலாளர் சே டி எஸ். மணி அவர்கள் உடனிருந்து வழி அனுப்பினர். அன்றிரவு செங்கற்பட்டு, மதுராந்தகம், திண்டிவனம் ஆகிய பேரூர்களில் சர்வகட்சித் தோழர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆலோசனைக் கூட்டங்களில் வந்து பேசிவிட்டு திண்டிவனத்தில் தங்கி ஓய்வு பெற்றனர்

13—2—56 காலை திண்டிவனத்திலிருந்து புறப்பட்டு விழுப்புரம், வளவனூர் ஆகிய ஊர்களில் சர்வகட்சிக் கூட்டணி ஆலோசனைக் கூட்டத்தில் பொதுச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர் வேண்டுகோள் விடுத்து புதுவை வந்து சேர்ந்தனர்.

புதுவை மங்களா கான் சபா மண்டபத்தில் சர்வகட்சி கூட்டணி கூட்டம், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்றது. மண்டபத்திற்கு வெளியேயும் ஏராளமான மக்கள் திரண்டிருந்து விளக்கம் பெற்றனர்.

பின்னர் அங்கிருந்து கடலூர் சென்று, பாடலி டாக்கீசில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் விளக்கவுரை யாற்றினார். இக்கூட்டத்தில் தெ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் இரா. சாம்பசிவம், எ. கோவிந்தசாமி எம். எல். ஏ. உடனிருந்து ஆவன செய்தனர்.

பின்னர் சேத்தியார் தோப்பு வந்து சேர்ந்து அங்கு குழுமியிருந்த கழகத் தோழர்களிடம் விளக்கம் கூறினர். தோழர் தில்லை-வில்லாளன் அவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

பின்னர், சோழதாம்புடையூர் வழியாக மாயவரம் வந்து சேர்ந்தனர். மாயவரம் 'டிராவலர்ஸ் பங்களா'வில் சர்வகட்சித் தோழர்கள் கூடியிருந்தனர். மாயவரம் என். கிட்டப்பா அவர்கள், சர்வ கட்சித் தோழர்களைப் பொதுச் செயலாளருக்கும், துணைப்பொதுச் செயலாளருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார். மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ அவர்களும் வந்திருந்தார்.

பின்னர் மாயவரத்திலிருந்து புறப்பட்டு குத்தாலம் வழியாக குடந்தைவந்து சேர்ந்தனர். அங்கு அன்னை அரண்மனையில், சர்வ கட்சித் தோழர்கள் கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. கே. நீல

(4-ம் பக்கம் பார்க்க)

## தீண்டாமை ஒழிப்புச் சேவைக்கு பரிசு

மதுரை, பிப். 15—

தம் தம் பகுதிகளில் தீண்டாமை ஒழிப்புக்குச் சிறந்த சேவை செய்யும் கிராம 'முன்சீப்'களுக்கும், சமூகத் தொண்டர்களுக்கும், ரூ. 50 வீதம் பரிசு வழங்க மாநில அரசியலார் தீர்மானித்திருக்கின்றனராம்.

1955—56ல் மாநிலத்தின் 13 மாவட்டங்களிலும் இத்தகு பரிசுகள் வழங்குவதற்காக மாநில அரசியலார் ரூ. 10,000 ஒதுக்கியுள்ளனராம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## பிப்ரவரி 20:

## பொது வேலைநிறுத்தத்திற்கு வணிகர்களின் பேராதரவு

★

### குடந்தை:

தற்சமயம் நடைபெற்றுவரும் மகாமக வேடிக்கையின் முக்கிய நாட்களில் ஒன்றான 20—2—56 அன்று பெரும் அளவுக்கு வியாபாரம நடைபெறுமெனினும், சர்வகட்சிக் கூட்டணியினரின் வேண்டுகோளுக்கேற்ப 20—2—56 அன்று கடையடைப்பு செய்வதாக குடந்தை வியாபாரத் துறைப் பெருங்குடிமக்கள் மனமார அறிவித்துள்ளனர்.

### திண்டுக்கல்:

வாரந்தோறும் திங்கட்கிழமையன்று நடைபெறும் மாட்டுச் சந்தையை 20—2—56 அன்று நடைபெறவிருக்கும் பொது வேலை நிறுத்தத்திற்கு மனமார்ந்த ஆதரவுதரும் வகையில் 21—2—56 செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைத்துவிட்டதாக அறிவித்துள்ளனர்.

### கோயில்பட்டி:

சர்வகட்சிக் கூட்டணியின் வேண்டுகோளுக்கேற்ப தங்களின் ஒருமித்த ஆதரவைக் காட்டும் வகையில் 20—2—56 அன்று கடை அடைப்பு செய்வதென்று 11—2—56 அன்று நடைபெற்ற நகர வர்த்தக சங்க நிர்வாகக் கமிட்டி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதுடன், அதனைத் துண்டுத் தாள்கள் வாயிலாக பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்தியுள்ளனர்.

★★★★★★★★ ★★★★★★★★★ ★-★★★★★-★★★★-★★★★★★

★★★-★★★★-★★★★★★★★★★★★

## 'ஹர்த்தால்'

(பொது வேலை நிறுத்தம்)

## காந்தியார் விளக்கம்

"அரசாங்கத்தின் செயலைக் கடுமையாகக் கண்டிக்க 'ஹர்த்தாலே' சரியான முறையாகும். தேசிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, மாபெரும் பொதுக்கூட்டங்களைவிடச் சக்திவாய்ந்த மார்க்கம் இது."

—1919-ல் 'யங் இந்தியா'வில்

★★★★★★★-★★★★★-★★★★★

# 'வாரீர்! பொது வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக்குவோம்!'

## 'பொதுமக்களும் தொழிலாளர்களும் ஓரணியில் இணைய வேண்டும்!'

## 'ஆட்சிப் பொறுப்பில் பங்குபெற மொழிவழி மாநிலம் அவசியம் வேண்டும்'

### ஆலைத் தொழிலாளருக்கு அந்தோணிபிள்ளை அழைப்பு

"தமிழ் மக்களுடைய நியாயமான எல்லை உரிமைகள் நிலைநாட்டப் படுவதற்காக—ஜனநாயக ரீதியான கோரிக்கைகள் வெற்றிபெறுவதற்காக—வரும் பிப். 20-ல் சர்வகட்சி கூட்டணியினர் வேண்டுகோளுக்கு ஒப்ப, பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபடவேண்டும் என்று பொதுவாக எல்லாத் தொழிலாளர்களையும், குறிப்பாக பக்கிங்காம் கர்நாடிக் ஆலைத் தொழிலாளரையும் கேட்டுக்கொள்கிறேன்.

"பிப் 20-ந் தேதியன்று பக்கிங்காம் கர்னாடிக் ஆலைத் தொழிலாளர்கள், கூட்டணியின் வேண்டுகோளின்படி எல்லோரும் கட்டுப்பாடாகப் பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டும்;

'மொழிவழியாக மாநிலங்கள் அமைவதுதான் ஜனநாயகம் அமுல் செய்யப்படுவதற்கு இன்றியமையாததாகும். மொழிவழி மாநிலம் அமைந்தால்தான் பாமர மக்களும் ஆட்சிப் பொறுப்பில் பங்குபெறும் உண்மையான ஜனநாயகம் அமுல் செய்யப்பட முடியும் எனவே, ஜனநாயக ரீதியான நமது தமிழ் எல்லைக் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், தட்சிணப் பிரதேசம் என்ற திட்டத்தை எதிர்க்கவும் தொழிலாளர்கள் இதர தமிழ் மக்களுடன் கைகோர்த்துக்கொண்டு முன்னணியில் நிற்கவேண்டுவது மிக அவசியமானதாகும். எனவே, பக்கிங்காம் கர்னாடிக் ஆலைத் தொழிலாளர்கள், பிப். 20-ந் தேதியன்று எல்லோரும் ஒற்றுமையாகப் பொதுவேலை நிறுத்தத்தில் பங்குபெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,"

—என்று, சென்னை தொழிற் சங்கத் தலைவர் தோழர் எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை எம். எல். ஏ., அவர்கள், 12—2—56 அன்று, சென்னை பெரம்பூர் திரு. வி. க. திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் குறிப்பிட்டதாவது:—

"மாநிலங்களைத் திருத்தி அமைக்கும் சிக்கலுக்குப் பரிகாரம் தேட மொழியை அடிப்படையாகக் கொள்வதுதான் நியாயமானதாகும் 'ஒரு மொழி பேசுகிற எல்லா மக்களும் ஒரே மாநிலத்தின்கீழ் வாழ வேண்டும்' என்று விரும்புவது இயற்கையானது.

"பல மொழி பேசுகிற மாநிலங்களில் ஜனநாயகம் அமுல் செய்யப்படுவது, சரியாக இயலாது.

"நிர்வாகம் திறம்பட நடக்கவும், நிர்வாகத்திற்கும் — மக்களுக்கும் தொடர்பு ஏற்படவும், மொழி வழி மாநிலங்கள் அமைவதும், அந்த மாநிலங்களில் அந்த அந்த வட்டார மொழிகள் இடம் பெறுவதும் இன்றியமையாததாகும்.

"அந்த அந்த வட்டார மொழிகள் ஆட்சி மொழியாக ஆக்கப்படும்போதுதான், அவை சட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்ப் பெருங்குடி மக்களே! வீரர்களே!

பிப். 20—சர்வகட்சி ஹர்த்தால் :

## 'இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்களும் பங்கு பெறலாம்'

" இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்கள் பிப். 20-ந் தேதி சர்வகட்சி ஹர்த்தாலில் கலந்துகொள்ளலாம்."

—இவ்வாறு, 5—2—56 அன்று திருச்சி தேவர் ஹாலில் நடைபெற்ற திராவிடர் கழக மாணவர் மாநாட்டில் பேசுகையில் பெரியார் ஈ. வெ. ரா. குறிப்பிட்டிருக்கிறார். —'தினமணி': 8-2-56

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16—2—56 புதன்

# பொது வேலைநிறுத்தம்

" அரசாங்கத்தின் செயலைக் கடுமையாகக் கண்டிக்க 'ஹர்த்தாலே' சரியான முறையாகும். தேசீயக் கருத்தை அறிவிக்க, மாபெரும் பொதுக் கூட்டங்களைவிட சக்தி வாய்ந்த மார்க்கம் இது."

இக்கருத்து, 1919-ம் ஆண்டில் கூறப்பட்டதாகும். இதைக் கூறியவரும் 'தேசப்பிதா' என்ற புகழுக்குரிய உத்தமர் காந்தியார் ஆவார்.

பலாத்காரத்தை அடிப்படையாகக்கொண்ட எதுவானாலும், அதற்கு உத்தமர் காந்தியாரின் ஆதரவு கிடைத்திருக்க முடியாது. 'நூறுக்கு நூறு பலாத்காரமற்றது' என்று அவர் கருதின காரணத்தால்தான், ஹர்த்தால் கொள்கைக்கு அவர் ...தரவு கிடைத்திருக்கிறது.

...ந்தார்களால் மேற்...ளப்படும் நடவடிக்கை...ல், பெரும்பான்மையினரான மக்களுக்கு அதிருப்தி, வேதனை ஏற்படுமானால், அதனை அரசாங்கத்திற்கு அறிவுறுத்தி கண்டித்து நல்வழிபடுத்துவதற்கு, பெரும் பொதுக்கூட்டத்தினும் சக்தி வாய்ந்த மார்க்கமான ஹர்த்தாலை மேற்கொள்ளவேண்டும் என்பது உத்தமரின் உள்ளக்கிடக்கை. பலாத்காரத்திற்குட்பட்ட ஒரு முறையை எவ்வாறு ஆதரிக்கமாட்டாரோ, அதைப் போன்ற மக்களாட்சி நடைமுறைக்கு ஹர்த்தால் முரண்பட்ட ஒன்றாக இருக்குமானால், அதையும் உத்தமர் ஒருக்காலும் ஆதரிக்க முன்வந்து இருக்கமாட்டார். எனவே, அவர் ஆதரவுக்குப் பாத்திரமான ஹர்த்தாலை, நாம் மேற்கொள்ளுவது மக்களாட்சி முறைக்கு ஒத்ததேயாகும்.

ஏகாதிபத்திய ஆட்சியாகிய அன்னிய ஆட்சிதான் மக்களை அலட்சியப்படுத்தி நடந்து மக்களுக்குக் கேடு செய்யும்—நம்மவர் ஆட்சி அவ்வாறு நடந்துகொள்ளாது, என்று எப்பொழுதும் உத்தமர் உரைத்தது கிடையாது. அக்கருத்தை உலக வரலாறு பொய்யென விளக்கமாகக் காட்டி இருப்பதால், உலக உத்தமர் அதுபற்றி எண்ணாதும் இருந்திருக்கிறார்.

இங்கிலாந்தில் பிறந்தவர்களும், வெள்ளைநிறம் கொண்டவர்களும் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தால் எதேச்சாதிகாரிகளாவர்; இந்தியத் துணைக் கண்டத்தில் பிறந்தவர்களும், வேறு நிறம் படைத்திருப்பவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்திருப்பவர்களும் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தால் மக்கள் விருப்பப்படி நடப்பர் என்ற நிச்சயமான இயற்கை நியதி இருப்பதாக உத்தமர் எப்பொழுதும் சொல்லவில்லை. அப்படிச் சொல்லுவது பொருத்தமற்றது என்பதை அறிந்திருந்ததினாலேயே, அவர் அவ்வாறு சொல்லாது விடுத்தார்.

பிரிட்டிஷாரானாலும், வேறு நாட்டவரானாலும், உள்நாட்டவரானாலும ஆட்சிபீடத்தமர்ந்து அதிகாரத்தை உருசிபார்க்கத் தொடங்கினால், நிச்சயமாக அவர்களில் சிலர் ஆணவங்கொண்டு மக்களை அலட்சியப்படுத்தி நடக்கத் துணிவார் என்ற எண்ணம உத்தமருக்கு இருந்திருக்கிறது. அவ்வகையில் காங்கிரஸ் கட்சியினரிடத்தில் அவருக்கு அதிகமான சந்தேகம இருந்திருக்கிறது. அதனால்தான, இந்தியத் துணைக் கண்டம் அரசியல் துறையில விடுபட்டதும, காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிடும்படி உத்தமர் அறிவுரை கூறி வற்புறுத்தினார்.

மொழிவழி மாகாண ஏற்பாடு உத்தமர் காந்தியாரால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். அதை காங்கிரஸ் ஒப்புக்கொண்டு, ஆதரவான தீர்மானங்களும செய்துள்ளன.

காங்கிரஸ் கோட்பாட்டை ஒப்புக்கொண்ட ஏகாதிபத்தியமகூட, தனது பிடியில் இந்தியத் துணைக் கண்டம் இருந்த பொழுது, மொழி ஒன்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஒரிசா மாகாணத்தையும், பாகிஸ்தானுக்குள்ளாக்கப்பட்டுவிட்ட சிந்து மாகாணத்தையும் உருவாக்க இருக்கிறது. ஏகாதிபத்தியம செய்த நற்செயலையும் காங்கிரஸ் ஆட்சியாளர் இப்பொழுது செயலாற்ற மறுக்கின்றனர்.

நாச வேலைகளைத் தூண்டவோ மேற்கொள்ளவோ திரிகரணசுத்தியாக விரும்பாமல், ஆட்சியாளர்களின் கொடிய அடக்குமுறைகளுக்குத் தங்களின் உயிரையும்கூட அர்ப்பணிக்க மக்கள் முன்வருவது எந்த வகையிலும் ஜனநாயக நடைமுறைகளை மீறியதாகாது.

கூட்டம் போடுவது, விவாதம் நடத்துவது, தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்புவது முதலியவைகள்தாம சகஜமாகப் பின்பற்றவேண்டிய முறைகள் என்றாலும, இந்தியப் பேரரசின் பிடிவாத குணத்தை, அவைகளால் மட்டுமே மாற்ற முடியாது என்பது, சென்ற சில நாட்களின் அனுபவத்தால் விளக்கமாகிவிட்டது. எனவே, அவைகளிலும் கூடுதலான சக்தி வாய்ந்த, பலாத்காரமற்ற ஜனநாயக முறைகளுக்கு உட்பட்ட ஒரு சிறந்த முறையை—அதாவது ஹர்த்தாலை (பொது வேலை நிறுத்தம்) மேற்கொள்ள வேண்டிய கட்டாயம சர்வகட்சி கூட்டணியினருக்கு ஏற்பட்டு இருக்கிறது.

1. தட்சிணப் பிரதேசம் அமைப்பதென்ற கருத்தை அறவே கைவிட்டு மொழிவழி இராஜ்யம் அமைக்கப்பட வேண்டும்.

2. தமிழக எல்லையோரத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளை தமிழகத்தோடு சேர்க்கவும், பிற மொழிப் பகுதிகளை அதனதன் மொழி வழங்கும் இராஜ்யங்களோடு சேர்க்கவும் ஒரு எல்லைக் கமிஷன் நியமித்து ஜனநாயக வழியில் முடிவு செய்ய வேண்டும்.

3. 'சென்னை இராஜ்யம்' என்ற பெயர் 'தமிழ் நாடு' என்று மாற்றப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளின் பின்னால் தமிழர்கள் ஒருமனதோடு ஒற்றுமையாக நின்று வற்புறுத்துகிறார்கள் என்பதை இந்திய அரசினருக்கும், சென்னை அரசினருக்கும் உணர்த்தும் அறிகுறியாக, பிப்ரவரி 20-ம நாள் திங்கட்கிழமையன்று பொதுவேலை நிறுத்தமும கடையடைப்பும (ஹர்த்தால்) நடத்தவேண்டும என்று சர்வகட்சிக் கூட்டணியால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அமிர்தசரஸ் காங்கிரஸ் தீர்மானம, காங்கிரஸ் மேலிடத்தாருக்குள்ள குழப்பத்தையும், அதிகார வெறியையும் காட்டுவதாக இருக்கிறதேயல்லாது, மாகாணத் திருத்தம் பற்றிய திட்டவட்டமானக் கோட்பாட்டை விளக்குவதாகஇல்லை. அத்தீர்மானத்தை ஒரு ஆதாரமாகக் கொண்டு 'தினமணி' 'ஹர்த்தால் வேண்டாம' என்று ஒத்துாதத் துவங்கியிருக்கிறது. அதுபற்றி நாளை ஆராய்வோம.

# 'கழகம் வளர வளர செலவின் அளவும் வகையும் வளர்கின்றன'

## 'நாட்டு விடுதலைக்காக உழைப்பைத் தாரீர்'

## தோழர்கள் கடமை குறித்து அண்ணா

சென்னை-பெத்துநாயக்கன்பேட்டையில் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் துவக்கப் பகுதி இங்கு தரப்படுகிறது; இடைப்பகுதி நேற்று தரப்பட்டது.—

" நீண்ட நாட்களாக அரசியலிலே எழுச்சிபெற்று விளங்கும் இந்த பெத்துநாய்க்கன்பேட்டையில் இப்படிப் பெரியதொரு பொதுக் கூட்டத்தைக் கூட்டி, நாட்டு மக்களது உள்ளத்தை கடந்த 20 நாட்களாக வாட்டிக்கொண்டிருக்கிற பிரச்சினைகளைப் பற்றி எங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு நல்லதோர் வாய்ப்புக் கிடைத்தமைக்காக நன்றி கூறிக்கொள்கிறேன்

" இந்த வட்டாரத் தி. மு. கழகத் தோழர்கள், 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 100-ம், மாநில மாநாட்டிற்கு துறைமுகத் தொழிலாளர்கள் ரூ. 180-ம தந்து, தி. மு. கழகம் மேற்கொண்டிருக்கிற நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்கள் காட்டிவருகிற பேராதரவை எடுத்துக்காட்டியமைக்காக நான் நன்றி செலுத்திக்கொள்கிறேன

" துறைமுகத் தொழிலாளர் சார்பில் நிதியளித்த தோழர் 'மாநில மாநாட்டின் நுழைவு வாயில் அமைப்பதற்கு இந்தத் தொகை பயன்படவேண்டும்' என்று கூறினர்; 'துறைமுகத் தொழிலாளர்களின் அன்பளிப்பால் அமைந்தது' என்று மாநில மாநாட்டு முகப்பிற்கு பெயரிடுவதில் பெருமை கொள்வோம்; ஆனால், மாநாட்டு முகப்பு இந்த ரூ. 180/-ல் முடியாது; குறைந்தது இரண்டாயிரம் ரூபாயாவது வேண்டும் ஒரு பகுதியை மட்டும் வசூலித்து, இந்த ரூ 180-தந்த தோழர் இதர பகுதி துறைமுகத் தொழிலாளரிடமும் வசூல் செய்து பாக்கித் தொகையைத் தர முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வேன்; அப்படி அவர் தந்தாலும் தராவிட்டாலும், துறைமுகத் தொழிலாளர் பெயர் பொறித்து முகப்பு அமைப்பதில் நமக்கெல்லாம பெருமதிப்புதான

" துறைமுகத் தொழிலாளர் சார்பில் நிதியளித்த தோழர் 'மாநில மாநாட்டிற்காகக் கேட்டிருந்த தொகை சேர்ந்துவிட்டது; எனவே, மேலும கொடுத்தால வாங்கிக் கொள்வார்களோ என்னவோ?'—என்ற ஐயப்பாட்டுடன் பேசினர் மாநில மாநாட்டிற்கென நிதி எவ்வளவு தருவதானாலும் நாம் வாங்கிக் கொள்வோம; அதிலே யாருக்கும் சந்தேகம வேண்டாம்

" ஏனெனில், கழகம் வளர வளர கழகத்தின் செலவின வகைகளும், அளவும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகின்றன புயல் வீசி வெள்ளம பெருகி, தஞ்சை—இராமநாதபுர மாவட்ட மக்கள் அவதியுற்ற நேரத்தில் நமது பொதுச்செயலாளர் அவர்கள் நிவாரண நிதிக்கு ரூ 1000 அனுப்பித் தந்தார்கள்; இப்போது 20-ந்தேதி பொதுவேலை நிறுத்தத்திற்காக—அதனை நடத்தும கூட்டணியின் செலவுக்கா வேறு எல்லாக் கட்சிகளையும்போல நாமும் ரூ 1000 தந்திருக்கிறோம; இப்படி, கழகத்திற்கு செலவாகிக் கொண்டேயிருக்கின்றது.

" இங்கிலாந்திலே மிகச் செல்வாக்கான பத்திரிகைகளுள் ஒன்றான 'சண்டே டைம்ஸ்' என்ற இதழின் நிருபர் இன்று காலை என்னை நமது தலைமை அலுவலகத்திலே வந்து சந்தித்தார்; அவர், இங்கிருந்து சில நிருபர்கள்—அவர்கள் பார்ப்பனர்கள் என்று நான் யூகிக்கிறேன்—நம்மைப் பற்றி தி. மு. கழகத்தைப்பற்றி தந்த தகவல்களின் உண்மை நிலை அறிந்து போக வந்தார்

'திராவிடர் இயக்கத்தவர் பெரும் பலாத்காரவாதிகளாமே! அவர்கள், 'மதமே கூடாது' என்கிறார்களாமே! கடவுளுக்கும் அவர்களுக்கும் நெடுநாள் பகையாமே! என்று மட்டும்தான் இங்கிலாந்தில் உள்ளவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

" இங்கிலாந்திலே உள்ள செல்வாக்கான ஒரு பத்திரிகையின் நிருபர், இந்தியாவிற்கு வந்து விஷயங்களைத் தெரிந்துபோனார் என்பதிலே ஆச்சரியம் இல்லை; அவர் தென்னாட்டிற்கு வந்து, நம்மையெல்லாம் சந்தித்தார் என்பதிலேகூட ஆச்சரியமில்லை; வந்த நிருபர் அவர், ஒரு பெண்மணி; பெண்மணி என்பதுகூட ஆச்சரியமில்லை—அவருக்கு 30, 35 வயதுதானிருக்கும், அதிலேகூட ஆச்சரியமில்லை—அவர், உலகப் பொது விவகாரங்களைத் தெளிவாகப் புரிந்துகொண்டவர் — அறிந்துகொண்டவர்; அந்த நிருபர், 'தி. மு. கழகத்தின் கொள்கைகளை விளக்கிக் கூறும் ஏடுகள் ஆங்கிலத்தில் உண்டா?' என்று கேட்டார்; நான் உண்மையிலேயே வெட்கப்பட்டேன்; ஆங்கிலத்தில் நம்மிடத்தில் அப்படி ஒன்றும் குறிப்பேடுகள் இல்லை.

' அவர் கேட்ட கேள்விகளுக்கு மட்டும் நான் தக்க வகையிலே பதிலளித்தது, அவர்களுக்கு விளக்கம தந்தேன். நான் என் இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுகின்றேன் என்றால், நமக்கு மேலும மேலும் நாட்டு மக்கள் பேராதரவு தருவார்களேயானால் — பணம் தருவார்களேயானால, நாம், இங்கிலாந்து பத்திரிகை நிருபர் கேட்டதைப் போன்ற ஆங்கிலக் குறிப்பேடுகளை வெளியிட முடியும; அதுபோன்ற காரியங்களுக்கு நம் மக்கள் தரும் பணத்தைச் செலவிடுவோம்

' இங்குள்ள பத்திரிகைகள் நம்மைப் பற்றிய செய்திகளை இருட்டடிப்புச் செய்கின்றன; அதேபோல, வடநாட்டில உள்ள எந்தப் பத்திரிகையிலும் நம்மைப் பற்றிய செய்திகள் வருவதே இல்லை. இந்தியாவிலேயே இப்படி என்றால், இங்கிலாந்தில் இருப்பவர்களுக்கு அமெரிக்காவிலிருப்பவர்களுக்கு எல்லாம நம்மைப் பற்றி எப்படித் தெரியும?

' அந்நாடுகளில இருப்பவர்கள் நம்மைப் பற்றித் தெரிந்துகொள்ளாவிட்டால நாம் எப்படித் 'திராவிட நாடு' பெறப்போகிறோம?

" சர்வதேசத்திலேயும பெருமையும புகழும கிடைத்திருப்பதாக தன்னை மறந்து திரியும் நேரு பண்டிதர், சர்வதேச காரியங்களுக்காக லண்டன் செல்லும்போது—பாரிஸ் செல்லும்போது—பெர்லின் வழியாகப் போகும்போது—வாஷிங்டன் வழியாகத் திரும்பும் போது அங்கெல்லாம உள்ள தலைவர்கள் நேருவைப் பார்த்து, 'என்னவோ, இந்தியாவைப் பற்றிப் பெருமையாகப் பேசினீர்கள்; உங்களுடைய நாட்டிலே ஒரு மூலையில, 'திராவிடம' என்று ஒரு நாடு இருக்கிறதாமே! அந்த நாட்டவர், 'தனி நாடு' கோருகிறார்களாமே!' என்று, தங்கள் நாட்டுப் பத்திரிகைகளில் நம்மைப் பற்றி வெளிவந்த கட்டுரைகளைக் காட்டிக் கேட்கவேண்டும; அப்போதுதான் நேருவுக்கு புத்தியும் வரும—வெட்கமும பிறக்கும!

" ஆகவே, ஆங்கிலத்தில் குறிப்பேடுகள் வெளியிடுதல போன்ற காரியங்களைச் செய்ய நீங்கள் எல்லாம், கழகத்திற்கு, கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பணம தரவேண்டும; தேடித் தேடிவந்து தரவேண்டும.

" நீங்கள் வேலை செய்பவர்களானால்—நாள் ஒன்றுக்கு எட்டுமணி நேரம் வேலை செய்தால், ஆறுமணி நேர உழைப்பின் பலனை குடும்பத்திற்கும, ஒருமணி நேர உழைப்பை உல்லாசத்திற்கும், 1 மணிநேர உழைப்பை நாட்டு விடுதலைக்குமாகத் தரவேண்டும். அப்படி நாடு விடுதலை பெறுகிற வரையில் நீங்கள் எல்லாம் தந்தால்தான் — அந்த நிலை வளர்ந்தால்தான் நாடு விரைவில் விடுதலை பெற வழி செய்ய முடியும்."

சென்னை அரசியலார் மேலும் 150 புதிய 'பஸ்'களை வாங்க முடிவு செய்துள்ளனராம் பஸ்களில ஏற்படும், மக்கள் நெருக்கடியைக் குறைக்கவும், பழைய வண்டிகளை நீக்கிவிடவும் இவ்வேற்பாடு.

# தமிழ் நாடு தமிழருக்கு இல்லையா?

# தமிழகமெங்கணும் போராட்ட அணிகள் அமைகின்றன

## பிப். 20—பொது வேலைநிறுத்தத்திற்கான ஏற்பாடுகள் மும்முரம்

குனிந்துகிடந்த தமிழகம் நிமிர்ந்துவிட்டது; சிதறுண்டு கிடந்த தமிழர் ஒன்றுபட்டுவிட்டனர்!

தமிழருக்கு டில்லி சர்க்கார் இழைத்துள்ள அநீதிகள் அடுக்கடுக்கானவை—கணக்கிலடங்காதவை! கொடுங்கோன்மையின் முத்திரைகளை—ஏகாதிபத்திய வெறியின் விளைவுகளை தமிழர் தாங்கிக்கொண்டிருக்கின்றனர்; தட்டிக்கேட்க இதுவரை தமிழகம் ஒன்றுபட்டதில்லை!

'தேவிகுளம்—பீர்மேடு வட்டங்கள் தமிழருக்கில்லை' என்ற டில்லியின் எதேச்சாதிகார—ஜனநாயக விரோதத் தீர்ப்பு தமிழ் மக்களை ஒன்றுசேர்த்திருக்கிறது.

சகல கட்சியினரும்—பல்வேறு அமைப்புகளில் பணிபுரிவோரும் கட்சி வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டிருக்கின்றனர்—தமிழர் தம் உரிமைகளைப் பெற—தமிழ்நாடு மொழிவழியாக அமைய—'தட்சிணப் பிரதேச'த் திட்டத்தை முறியடிக்க—'சென்னை' என்ற பெயருள்ள மாநிலத்திற்குத் 'தமிழகம்' என்று பெயரிட—'பிப்ரவரி 20-ந் தேதியன்று பொது வேலைநிறுத்தம் நாடெங்கும் நடைபெற வேண்டும்' என்று சர்வ கட்சிக் கூட்டணியினர் அறிவித்துள்ளார்கள்.

சென்னை நகரின் பல வட்டங்களிலும், மாகாணத்தின் பல நகரங்களிலும், பேரூர்-சிற்றூர்களிலும், தி. மு. கழகம், தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, சோஷலிஸ்டுக் கட்சி, மக்கள் சோஷலிஸ்டுக் கட்சி ஆகிய கட்சிகள் அனைத்தும் இணைந்து 'கூட்டணி' அமைத்து, செயற்குழுக்களையும் உருவாக்கியுள்ளன. பிப்ரவரி 20-ந் தேதி பொது வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கத் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

கூட்டணி அமைப்புகளை விரிவாகவும், விளக்கமாகவும் வெளியிட நாம் விழையும்வண்ணம் செயலாற்றுவதற்கு இதழின் அளவும், வெளியிட வேண்டிய செய்திகளின் பெருக்கமும தடைகளாக உள்ளன. எனவே, கூட்டணி அமைக்கப்பட்டுள்ள இடங்களின் பெயர்களை மட்டுமே வெளியிட வேண்டிய நிலையில் உள்ளோம். (ஆ—ர்)

### திருச்சி

6—2—56 காலை 11 மணிக்கு, திருச்சி நகர கலைக் கழகத்தில், சர்வகட்சி பிரமுகர்களின் கூட்டம் தோழர் எம் எஸ். மணி தலைமையில் நடைபெற்றபோது தோழர் எம். எஸ் மணி அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு, முக்கிய முடிவுகள் பல செய்யப்பட்டன.

### பரவை:

9—2—56 அன்று சாவடியில் தோழர் பி. கருப்பண்ணன் தலைமையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் குழு ஒன்று நியமிக்கப்பட்டது

### பண்ணைப்புரம்:

8—2—56 பகல் 2 மணிக்கு சர்வகட்சி பிரதிநிதிகள் கூட்டம் தோழர் சோலைமுத்து தலைமையில் நடைபெற்றபோது, பல கட்சித் தோழர்களைக்கொண்ட செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டு தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

### கடையநல்லூர்:

10-2-56 இரவு 10-மணிக்கு நகர கம்யூனிஸ்டு கட்சி அலுவலகத்தில் 'சர்வ கட்சி கூட்டணி' அமைப்புக் கூட்டம், நகர தி. மு க. செயலாளர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்றபோது பல கட்சித் தோழர்களைக் கொண்ட செயற்குழு ஒன்று நிறுவப்பட்டது.

### பெரியகுளம்

13—2—59ல் சர்வகட்சிக் கூட்டம் தோழர் கே. எம் சின்னத்தேவர் தலைமையில் கூடி, தோழர் மீ. சு. இளமுருகு—பொற்செல்வி அவர்களைத் தலைவராகக்கொண்ட குழு ஒன்றை நியமித்தது.

### பனங்குளம்

10—2—56ல, நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில தோழர் ம. செ. சிவகுருநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது

### மணமேடு:

7-2-56-ல், மணமேடு விவசாயக் கழகப் பணிமனையில் தோழர் ஏ எம். வேம்படி தலைமையில் சர்வ கட்சி போராட்ட கூட்டணி அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர் எம் ஆர். பிச்சை அவர்களை தலைவராகக்கொண்ட குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது

### புகலூர்:

11—2—56-ல், வேலாயுதம் பாளையத்தில் புகலூர் சுற்று வட்டார சர்வகட்சிக் கூட்டணி அமைப்புக் கூட்டம் தோழர் டி. பி. மூர்த்தி தலைமையில் நடைபெற்றபோது, தோழர் டி. பி மூர்த்தி அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

### புவனகிரி:

12—2—56-ல் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டணி கூட்டத்தில் தோழர் கோ. வரதராசன் அவர்களைத் தலைவராகக்கொண்ட குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

### அரக்கோணம்

12-2-56 இரவு 8-மணிக்கு, அரக்கோணம் 'மில்டன்' மாடியில் சர்வகட்சிக் கூட்டம் தோழர் என் கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் ஏ எல் சி கிருஷ்ணசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றை நியமிக்கப்பட்டு, பீர்மேடு, தேவிகுளம் பிரச்சினையைப் பொதுமக்களுக்கு விளக்க 19, 20-2-56 தேதிகளில் சர்வ கட்சிப் பொதுக்கூட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

### கரூர்:

10—2—56 இரவு, கம்யூனிட்டு கட்சி அலுவலகத்தில் சர்வகட்சித் தோழர்கள் கூடி, தோழர் ஏ எஸ் மணி அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றை அமைத்தனர்

### வேலூர்—சேலம்:

13—2—56 இரவு 8 மணிக்கு. தோழர் வோ. கருப்பையா சைக்கிள் கடையில் சர்வகட்சிக் கமிட்டி கூட்டம் கூடி, தோழர் வி. ஏ இராமநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு அமைக்கப்பட்டது

### சேத்தூர்:

12—2—56 காலை 10-15-மணிக்கு மூகவூர் கே. கணபதியப்பன் இல்லத்தில் பல கட்சித் தோழர்கள் அடங்கிய கூட்டம் தோழர் எஸ் பி. செல்லப் பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது, தோழர் எஸ். பி. செல்லப்பிள்ளையை தலைவராகக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

### பட்டிவீரன்பட்டி

11—2—56ல் நடைபெற்ற சர்வ கட்சி கூட்டணி கூட்டத்தில் தோழர் டி என். எஸ். மீனாட்சி சுந்தரம் அவர்களை தலைவராகக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

### பல்லாவரம்:

5—2—56ல் நடைபெற்ற சர்வ கட்சி பிரதிநிதிகளின் கூட்டத்தில் தோழர் என். பி. லோகநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு முடிவுகள் பல மேற்கொள்ளப்பட்டன.

### நிலக்கோட்டை:

8-2-56ல், அசந்தா போட்டோ ஸ்டுடியோவில், நடைபெற்ற சகல கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில், தோழர் இ. காத்தான் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்ற தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், முடிவுகள் பல மேற்கொள்ளப்பட்டன

### அரூர்

6—2—56 இரவு, அரூர் நகர மன்றத்தில் சர்வ கட்சியினர் கூட்டம் தோழர் தோழர் ஆர். சென்னி (செட்டியார்) தலைமையில் நடைபெற்றபோது, தோழர் சென்னி (செட்டியார்) அவர்களைத் தலைவராகக்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

### ஓ. கொண்டலாம்பட்டி

9—2—56 இரவு 9 மணிக்கு, ஓ. கொண்டலாம்பட்டி தி மு கழகத்தில் தோழர் வி. கே. வெங்கட்டப்பன் தலைமையில் எல்லாக் கட்சித் தோழர்களும் கூடி சர்வ கட்சிக் கூட்டணி அமைத்து, தோழர் கே. ஆர். வரதராசன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றைத் தேர்ந்தெடுத்து. முடிவுகள் பல மேற்கொள்ளப்பட்டது.

### புழல்:

சென்னையை அடுத்த புழல் கிராமத்தில், தி. மு. க. அலுவலகத்தில், பல கட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டம் தோழர் சி. கே மாதவன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் சி. கே. மாதவன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

### மேலூர்:

11—2—56 மாலை 3 மணிக்கு பல கட்சிப் பிரதிநிதிகளின் கூட்டம் தோழர் எம் வீரண்ணன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் ஏ. வேலுசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

### துறையூர்:

11-2-56 இரவு 9-மணிக்கு. தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற பல கட்சிப் பிரதிநிதிகள் கொண்ட கூட்டத்தில், தோழர் எம். பி பண்டரிநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

### கொட்டாம்பட்டி:

12-2-56 மாலை 4-மணிக்கு நடைபெற்ற கொட்டாம் பட்டி தி. மு. கழக உறுப்பினர் கூட்டத்தில் தோழர் பழ இரத்தினம் அவர்களை தலைவராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது

### குனியமுத்தூர்:

13—2—56-ல், 7 மணியளவில், கழகக் கட்டிடத்தில் சர்வகட்சிக் கூட்டணி திரு. கே. எஸ், சண்முகம் தலைமையில் அமைக்கப்பட்டு, திரு. கே. ஏ. பி. முத்து அவர்களைத் தலைவராகக் கொண்ட செயற் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு முடிவுகள் பல மேற்கொள்ளப்பட்டன

### திருப்பூர்:

8—2—56-ல் நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டு முன்னணி அமைப்புக் கூட்டத்தில் தோழர் என். கருப்பசாமி அவர்களைச் செயலாளராகக்கொண்ட செயற் குழு ஒன்று அமைக்கப்பட்டது

### பரமக்குடி

8—2—56ல், தி. மு கழக மனையில் தோழர் ஏ. எஸ். இராமமூர்த்தி தலைமையில் சர்வகட்சிக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர் எம். ஏ. வகாப் அவர்களைத் தலைவராகக்கொண்ட குழு அமைக்கப்பட்டது.

### துறையூர்

11—2—56ல், தி. மு. கழகக் கட்டிடத்தில் சர்வகட்சிகளின் கூட்டம் தோழர் மா. நடராசன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் எம். பி. பண்டரிநாதன் அவர்களைத் தலைவராகக்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

### கணியூர்

12-2-56 இரவு 8-மணிக்கு கணியூர் 'விக்டரி ரைஸ் மில்'லில், தோழர் கே. கோபால்சாமி தலைமையில் பல கட்சி பிரதிநிதிகள் கொண்ட ஓர் சர்வகட்சி கூட்டம் கூடி, தோழர் எம். வேலுச்சாமி அவர்களை தலைவராகக் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

### கம்பம்

13-2 56 காலை 11-மணிக்கு சர்வகட்சி பிரதிநிதிகளின் கூட்டம், பிரசண்ட் டாக்கிசில் தோழர் கே. எம். சமீரா தலைமையில் நடைபெற்றபோது தோழர் கே. வி ரங்கசாமி (கவுண்டர்) அவர்களைத் தலைவராகக்கொண்ட குழு ஒன்றை அமைக்கப்பட்டது.

### புளியம்பட்டி:

11—2—56 மாலை 6 மணிக்கு புஞ்சைப் புளியம்பட்டி முனிசிபல் பங்களாவில் சர்வகட்சிப் பிரதிநிதிகளின் கூட்டம், தோழர் கே. என் சி அய்யாசாமி (செட்டியார்) தலைமையில் நடைபெற்றபோது, தோழர் பி வி. ஆறுமுகம் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது

### சேலம்:

7—2—56-ல், பி. சோ. கட்சி அலுவலகத்தில், சர்வகட்சியினரும் கூடி, தற்காலிக் கூட்டணி அமைத்து, திரு டி. அப்துல் பாஷீத் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது

### சிங்கம்புணரி:

12—2—56ல், 'இருஷ்ணவன்று சர்வீஸ் கட்டடத்தில் நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்தில், திரு. வீர சுப்பய்யா (பிள்ளை) அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

### வட சென்னை:

8—2—56-ல், சர்வகட்சிப் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து, 'வட சென்னை சர்வகட்சிக் கூட்டணி அமைத்து, தோழர் கே. எம். கண்ணபிரான் (தி. மு. க.) அவர்களைக் கன்வீனராகக் கொண்ட குழு ஒன்றை நியமித்தனர்.

### சென்னை 1-வது வட்டம்

8-2-56-ல் நடைபெற்ற சர்வக் கட்சிகள், முக்கியப் பிரமுகர்கள் அடங்கிய கூட்டத்தில் தோழர் பி. எஸ். மணி அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

### சென்னை 29, 30 - வட்டம்

12—2—56 மாலை 5 மணிக்கு சிந்தாதிரிப்பேட்டையில், சர்வகட்சியினரும், பல மன்றங்களின் பிரதிநிதிகளும் ஒன்று கூடி, தோழர் தி. மணிவண்ணன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றைத் தேர்ந்தெடுத்தனர்.

### சென்னை 46-வது வட்டம்:

ஆள்வார்பேட்டை தி. மு. கழகப் பணிமனையில் நடைபெற்ற சர்வ கட்சித் தோழர்கள் கூட்டத்தில், தோழர்கள் பி. ஆர். இராமலிங்கம் அவர்களைத் தலைவராகக்கொண்ட குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு, முடிவுகள் சில மேற்கொள்ளப்பட்டன.

### அமைந்தகரை—சென்னை:

9—2—56-ல், அமைந்தகரை அறிவு இயக்க மன்றத்தில் பல மன்றங்களின் பிரதிநிதிகள் கூடி, 'சர்வகட்சி மன்றக் கூட்டணி' ஒன்றை நிறுவி, 11 பேர் கொண்ட குழு ஒன்றைத் தேர்ந்தெடுத்தனர்.

## பிளவு இல்லையாம்—பேச்சு நடக்கிறதாம்!

சென்னை, பிப். 14—

"தட்சிணப் பிரதேச சம்பந்தமாக சென்னை அமைச்சரவையில் பிளவு இல்லை"

என்று சென்னை நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

"தட்சிணப்பிரதேசம் அமைப்பது எந்த நிலையிலுள்ளதென்று விளக்கம் தேவையாயின், முதலமைச்சர் திரும்பிய பிறகுதான் தெரியும்"

என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

'இருமொழி மாநில அமைப்பு பற்றிய தீர்மானத்தை அமிருதசரசில் நீங்கள் ஆதரித்தீர்களே, அந்த நிலைமை என்ன?'

என்று நிருபர்கள் கேட்டபோது, 'என், அதிலென்ன? அது செயற்குழுவின் தீர்மானம்; மேலும் அதை ஆதரித்துப் பேசுவதற்கு முதலமைச்சரும் எனக்கு அனுமதி கொடுத்திருந்தார்' என்று சுப்ரமணியம் கூறினர்.

'நீங்கள் அமிருதசரசில் இருந்தவரையில், நடந்த விவாதங்களின் தன்மை என்ன?' என்று கேட்டபோது, 'பொதுவாகத்தான் விவாதம் நடந்தது; இன்னும் நடந்துக் கொண்டிருக்கிறது," என்றார்.

'இந்த விவாதங்கள் பயனளிக்குமென்ற நம்பிக்கை புண்டா?' என்ற கேள்விக்கு, 'இயற்கையாகவே நம்பிக்கையுள்ளவன் நான்; ஆனல் இவ்விஷயத்தில் நம்பிக்கை வைக்கலாமா, கூடாதா என்று சொல்ல முடியாது' என்று குறிப்பிட்டார்

# உரிமை காக்க! உடைமை நிலைக்க!

## தேர்தல் பிரச்சாரத்திற்கு இலவச கார்டுகளாம்!

தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு அபேட்சகரும், தனது தொகுதியில் உள்ள ஒவ்வொரு வாக்காளருக்கும் தனக்கு 'வோட்டு'ப் போடுமாறு கேட்டுக்கொண்டு குறைந்தது ஒரு கார்டாவது கட்டணமில்லாமல் அனுப்ப அனுமதிக்கப்படவேண்டும் என்றும், இதற்கு அவசியமான நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக் கொள்ளளாம் என்றும் மக்கள் பிரதிநித்துவ சட்ட திருத்த மசோதாவைப் பரிசீலித்த தனிக் குழுயோசனை கூறியுள்ளதாம்.

# ஸ்டூடியோ-சினிமா-நாடக கொட்டகைகள்

## 'பொது வேலைநிறுத்தத்தில் பங்கு கொள்ள வேண்டும்'

## 'நடிக-நடிகையரும் ஒத்துழைக்க வேண்டும்'

### தென்னிந்திய நடிகர் சங்கத்தின் வேண்டுகோள்

13—2—56 காலை 10 மணிக்கு நடைபெற்ற தென்னிந்திய நடிக சங்க செயற் குழுக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது:—

"மாநில புனரமைப்பு சம்பந்தமாகத் தமிழ் நாட்டின் 'சர்வ கட்சிக் கூட்டணி' விடுத்துள்ள அறிவிப்பை மதிக்கும் முறையில், பிப். 20-ந் தேதி நடிக, நடிகையர் எவரும் எவ்வித கலை நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ள வேண்டாமென்றும், அன்று ஸ்டுடியோக்கள், சினிமா, நாடகத் தியேட்டர்கள் முதலிய கலை நிலையங்களும் வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்றும், சம்பந்தப்பட்ட எல்லோரையும் 'தென்னிந்திய நடிகர் சங்கம்' கேட்டுக் கொள்கிறது."

# பொதுச்செயலாளர் சுற்றுப்பயணம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேகம் அவர்களும் உடனிருந்தார். பொதுச்செயலாளர் அனைவருக்கும் விளக்கம் கூறினார். பின்னர் அவ்விடமிருந்து பாபநாசம் அய்யம்பேட்டை ஆகிய ஊர்களில் கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்த சர்வக்கட்சித் தோழர்கள் கூட்டத்தில் பொதுச்செயலாளரும், துணைப்பொதுச் செயலாளரும் கலந்து பேசிவிட்டு தஞ்சை வந்து சேர்ந்தனர்.

தஞ்சை ராஜா சத்திரத்தில் சர்வகட்சித் தோழர்களின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஏ. வி. பதி, சர்வகட்சித் தோழர்களையும் அறிமுகப்படுத்தி வைத்த பிறகு, துணைப்பொதுச் செயலாளர், சர்வகட்சி கூட்டணியின் வேண்டுகோளை விவரித்துக் கூறினார்.

பொதுச் செயலாளர் தேவிகுளம்-பீர்மேடு முதலிய தமிழ்ப் பகுதிகள் மீட்டப்பட வேண்டிய விவரத்தை எடுத்துக்கூறினார்.

மாயவரத்திலிருந்து தஞ்சை வரை-மாவ[illegible]ச் செயலாளர் இளங்கோ[illegible] கலந்துகொண்டு விடைபெற்று[illegible]சென்றார்.

[illegible]சையிலிருந்து இரவு 8-30 [illegible]கு புறப்பட்டு இரவு 9-30 மணிக்கு திருச்சிவந்து சேர்ந்தனர். திருச்சி நகர தி. மு. க. அலுவலகத்தில் தி. மு. க. பொதுஉறுப்பினர்கள், சர்வகட்சித் தோழர்கள் அடங்கிய கூட்டம் நடைபெற்றது. நகரச் செயலாளர் எம். எஸ். மணி தலைமை வகித்தார். பின்னர் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் ஹர்த்தாலில் கடைபிடிக்கப்படவேண்டிய முறைகளை விளக்கினார்.

பொதுச் செயலாளர் இரா நெடுஞ்செழியன் மொழிவழி மாநில அமைப்பின் அவசியத்தை விரிவாக எடுத்துக்கூறினார்.

பிறகு சர்வகட்சித் தோழர்கள் தங்களின் உறுதியை எடுத்துக் கூறினர். மாவட்டச் செயலாளர் அன்பில் தருமலிங்கம் கூட்டத்தை முன்னின்று நடத்தினார்.

திருச்சிவரை தோழர் கண்ணதாசன் அவர்கள் துணையாக வந்து பிறகு காரைக்குடி சென்றுவிட்டார்.

14—2—56 காலை 8 மணிக்கு பொதுச்செயலாளர், துணைப் பொதுச் செயலாளருடன் திருச்சியை விட்டுப் புறப்பட்டு மணப்பாறை—திண்டுக்கல் ஆகிய இடங்களில் நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டணித் தோழர்களைக் கலந்து உரையாடிவிட்டு, சின்னாளப்பட்டி வந்தடைந்தார். அங்கு காலை 11-30 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர், திண்டுக்கல் சமதர்மம் ஆகியோர் பேசினர்.

பின்னர் ராயபாளையம் என்ற சிற்றூரில் கூடியிருந்த கழகத் தோழர்களிடம் உரையாடிவிட்டு மதுரை வழியாக பிற்பகல் 3-30 மணிக்கு திருமங்கலம் வந்து சேர்ந்தனர்.

திருமங்கலத்தில் கூட்டணித் தோழர்களைக் கலந்துபேசிவிட்டு ஆவல்சூரன்பட்டி வழியாய் விருதை வந்து சேர்ந்தனர். விருதையில் நாடார் பரிபாலன சாவ கட்சிக் கூட்டத்தில் சர்வகட்சித் தோழர்கள் கூட்டம் நடைபெற்றது. பொதுச் செயலாளரும், துணைப் பொதுச்செயலாளரும் விளக்கம் கூறினர். தோழர் ஏ.வி.பி ஆசைத்தம்பி உடனிருந்து ஆவன செய்தார்.

பின்னர், அங்கிருந்து தோழர் எம். எஸ். இராமசாமி அவர்களுடன் சாத்தூர் வந்து சேர்ந்து சர்வகட்சித் தோழர்களைச் சந்தித்து, விவரம் அறிந்து, கோயில்பட்டி, எட்டையாபுரம் ஆகிய ஊர்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வகட்சிக் கூட்டங்களில் கலந்துகொண்டு இரவு 9 மணிக்கு தூத்துக்குடி வந்து சேர்ந்தனர்.

தூத்துக்குடியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளரும், துணைப் பொதுச்செயலாளரும் சொற்பொழிவாற்றிய பின்னர், சர்வ கட்சித் தோழர்களைத் தனியாகச் சந்தித்து கலந்து பேசினர்.

பின்னர் நெல்லை மாவட்டச் செயலாளர் கே. வி. கே. சாமி அவர்களுடன் புறப்பட்டு இரவு 1 மணிக்கு நெல்லை வந்தடைந்து, சர்வகட்சித் தோழர்களிடம் கலந்து பேசிவிட்டு ஓய்வு பெற்றனர்.

15—2—56 காலை 8-30 மணிக்கு பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர், கே. வி. கே. சாமி, எம். எஸ். இராமசாமி ஆகியோருடன் மேற்கொண்டு சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

இச்சுற்றுப் பயணத்தின் ஒவ்வொரு கூட்டத்திலும் மாணவர்களும், தொழிலாளர்களும் காட்டிவரும் உற்சாகம் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

# அந்தோணிப்பிள்ளை அழைப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபைகளிலும், வழக்கு மன்றங்களிலும், இதர அலுவல்களிலும் மக்களின் எண்ணங்களை எடுத்துச் சொல்வதும், அந்த எண்ணங்கள் செயலாற்றப்படுவதும் சாத்தியமாயிருக்க முடியும்.

"பன்மொழி மாநிலங்களில் நிர்வாகம் திறம்பட நடக்க முடியும் என்று கூறுவது வெறும் கேலிக்கூத்து. தாய் மொழியில் அல்லாது வேறெந்த மொழியாலும் எந்த மக்களும் தங்கள் எண்ணங்களை — உள்ளக் கிடக்கைகளைத் தெளிவாக வெளிப்படுத்த முடியாது.

"நிர்வாகம் திறம்பட — ஜனநாயக முறைப்படி நடைபெற மொழி வழி மாநில அமைப்பு இன்றியமையாததாகும்.

"இன்று நாம் கூறுகிற இதே மொழி வழிக் கோரிக்கையை, தனது அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகக் காங்கிரஸ் கடந்த மூன்று தலைமுறைகளாகக் கூறி வந்திருக்கிறது.

"ஆனால், சுதந்திரம் வந்த பிறகு அந்தக் கோரிக்கையை—இலட்சியத்தை - கொள்கையைக் கைவிட்டு விட்டதுடன், இன்று அதே கோரிக்கையை இழித்தும் பழித்தும் காங்கிரஸ் தலைவர்கள் பேசுகிறார்கள்.

"பம்பாயில் கலகம் ஏற்பட்டது என்றால், அதற்கு முழுப் பொறுப்பும் ஏற்கவேண்டியவர்கள் காங்கிரஸ் சர்க்கார்தான்!

"'மொழிவழி மாநிலம் அமைந்தால் இந்தியாவின் ஒற்றுமை குலைந்துவிடும்' என்று கூறுவது, மக்களை ஏமாற்றுவதற்குச் சர்க்கார் கையாளுகிற தந்திரமேயாகும்!

"மாநிலப் புனரமைப்புக் குழு தோன்றுவதற்கு முன்பே ஆந்திரம் மொழிவழியாக பிரிக்கப்பட்டது; மேற்கு வங்கமும், ஒரிசாவும் முன்பே அமைந்திருந்தன. மொழி வழியாக எந்தவகையாலே இவை இந்திய ஒற்றுமையைக் குலைத்துக் கொண்டிருந்தன?

"எனவே, ஆட்சியாளர்களின் தந்திரங்களுக்கு நாம் பதில் தந்தாகவேண்டும் என்பதால், தமிழக மக்களின் எதிர்காலம் கருதி, தொழிலாளர்கள் அனைவரும் சர்வகட்சிக் கூட்டணியின் வேண்டுகோளுக்கு, ஒப்ப பொதுவேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டு, வெற்றியாக்கித் தர வேண்டும் என்று கோருகிறோம்."

---

## தேவிகுளம்-பீர்மேடு பற்றி தி. மு. க. விளக்கம்

17—2—56 வெள்ளி மாலை 6 மணிக்கு

### சென்னை—சைதாப்பேட்டை

காரணீசுவரர் கோவில் தேரடி மைதானம்

தலைவர்:

**எஸ். ஆர். வேலன்**

பேசுவோர்:

**அண்ணா**

**போளூர்-கே. சுப்பிரமணியம்**

—சைதை தி. மு. கழகம்

---

தேவிகுளம்-பீர்மேடு: தி.மு.க.விளக்கம்

### லால்குடி:

சிவன் கோவில் முன்பு

18—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: அன்பில் தர்மலிங்கம்

பேசுபவர்: ஈ. வே. கி. சம்பத், அ. பொன்னம்பலனார்

★

### உறையூர்:

18—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: எஸ். ஜி. கிருஷ்ணன்

பேசுவோர்: சி. பி. சிற்றரசு, எஸ். வி. லிங்கம், எம். எஸ். மணி

★

### சேவூர் (வ. ஆ.)

அம்மன் கோயில் மேடையில்

18—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: வி. இ. செயராமன்

பேசுவோர்: எஸ். எஸ். தென்னரசு, ஏ. கே. வில்வம்

★

### முக்கூடல்:

காந்தி திடலில் 'பாண்டியனார்' அரங்கில்

18—2—56 இரவு 8 மணிக்கு

தலைவர்: மா. சு. முத்துக்குட்டி

பேசுவோர்: எம். எஸ். இராமசாமி

★

### கீழப்பழுவூர்:

நடுத்தெருவில

18—2—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்: கு. தங்கவேல், சிவபெருமாள், ம. இராசு

---

ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவில்: சர்வ கட்சிப் பொதுக் கூட்டங்கள்

### ஆவடி:

17—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஆ. து. நடராசன்

பேசுவோர்: எஸ். பக்கிரிசாமிப்பிள்ளை எம்.எல் ஏ., ஆர். ஸ்ரீனிவாசமூர்த்தி

★

### குன்றத்தூர்:

18—2—56 மாலை 5 மணிக்கு

தலைவர்: பி. சம்பந்தன்

பேசுவோர்: போளூர்-சுப்ரமணியம், இளம்பரிதி, ஏ. வெங்கடாசலம், வி. கண்ணப்பன்

★

### சேலம்:

தேவிகுளம் — பீர்மேடு பிரச்சினையை விளக்கி சர்வகட்சித் தோழர்கள் பேசுவர்.

பிப். 17: 6-30 மணி—குகை மாரியம்மன் கோயில்;
,, 18: 6-30 மணி—சீனிவாசா பார்க் — செவ்வாய்ப் பேட்டை;
,, 19: 6-30 மணி—'வி' மார்க்கெட்—சேலம்;
,, 20: 4-30 மணி—ராசேந்திரா சத்திரத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு 'வி' மார்க்கெட் வந்துசேரும்.

---

**சுகாதாரப் படக்காட்சி**

17—2—56 மாலை 6½ மணிக்கு சென்னை சூளை டிமலஸ் ரோடிலுள்ள இந்து யூனியன் கமிட்டி ஆரம்பப்பள்ளியில, அமெரிக்கச் செய்தி இலாகாவினரின் சுகாதாரப் படக்காட்சி ஒன்று நகர இளைஞர் கழகத்தின் சார்பில் நடைபெறும்.

---

# 20—2—56 ஹர்த்தால்

## வேண்டுகோள்

★

20—2—56 அன்று நடைபெறவிருக்கும் **ஹர்த்தால் ஊர்வலத்தில்** எந்தக் கட்சியின் சின்னங்களும்(கொடிகள்) ஏந்திச் செல்லாமல், தமிழ்ப்பகுதிகளை மீட்கும் வாக்கியங்களைத் தாங்கிய அட்டைகளை மட்டும் ஏந்திச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்

—சர்வகட்சிக் கூட்டணி

---

## சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

பிப். 18: திருச்சிராப்பள்ளி
19: திருக்கழுக்குன்றம்
25: சத்திரப்பட்டி
26: கொட்டாரம் (அம்மாசமுத்திரம்)
28: சின்னாளப்பட்டி
29: மேல்பட்டாம்பாக்கம்

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம். ஏ

# பிப்ரவரி 20-ல் பொது வேலைநிறுத்தம்!